செ.கு.எண்: 5

நாள்: 04/01/2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை - 4.1.2012

தமிழகத்தை தாக்கிய "தானே" புயலின் காரணமாக, விழுப்புரம் மாவட்டம், சின்னபாபுசமுத்திரம் கிராமத்தில் கடந்த 31.12.2011 அன்று வீட்டின் கூரை விழுந்து திரு. வீரப்பன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

"தானே" புயலின் காரணமாக மரணமடைந்த திரு. வீரப்பன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பத்தில் உயிரிழந்த திரு. வீரப்பன் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை -9